# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No.328/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | திரு.மனோகரன் |
| Father's /Husband Name | : | ராமலிங்கம் |
| Village | : | அரிதுவாரமங்கலம் |
| Taluk | : | நீடாமங்கலம் |
| Age | : | 39 |
| Occupation | : | தலைமைக்காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13th day of March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது அரிதுவாரமங்கலம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.03.2021ம் தேதி காலை 09.30 மணியளவில் குடவாசல் காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது நானும் காவல் ஆய்வாளர் திருமதி. ரேகாராணி மற்றும் காவலர் திரு.கதிரவன் ஆகியோர்களுடன் குடவாசல் காவல் சரகத்திற்கு உட்பட்ட நாணச்சேரி பேருந்துநிலையம் அருகே கண்காணித்து ரோந்து செய்து வந்த போது எதிரி மஞ்சுளா என்பவரால் எவ்வித அனுமதியும் இல்லாமல் தேர்தல் நடைமுறை விதிகள் அமலில் இருந்த நிலையில் அதை மீறி சட்டத்திற்கு புறம்பாக தி.மு.க கட்சிக் கொடியை கட்டி பொது இடத்தின் அழகை சீர்குலைக்கும் வகையில் எவ்வித அரசு அனுமதியின்றி கட்டப்பட்டிருந்தது. நாங்கள் காவல் ஆய்வாளருடன் நிலையம் வந்து சம்மந்தப்பட்ட எதிரி மஞ்சுளா என்பவர் மீது குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.317/2021, சட்டப்பிரிவு 4(1) TNOPPD Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அதற்கு நானும் கதிரவனும் உதவியாக இருந்தோம். காவலல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு அருகாமையில் வீடுகள் எதுவும் உள்ளதா என்றால் உள்ளது. எதிரி தான் மேற்படி கொடியை கட்டினார் என்று குறிப்பிட்டு

சொல்ல முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது ஆய்வாளர் உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.13 13:17:34 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.